**சரியான விடை Mdu I Revision Commerce Jan 2017**

1.(அ) உலகளவில் பெரியது
2.(இ) கூட்டுப்பங்கு நிறுமம்
3.(இ) சிற்றளவு வியாபாரம்
4.(ஆ) விருப்பத்தின் பேரில்
5.(அ) முதல்வா் மற்றும் முகவர்
6.(ஆ) பங்குகள்மீதுசெலுத்தப்பெறாதிருக்கும் மதிப்பளவாகும்
7.(இ) நிறுமச் செயல்முறை விதிகளின் மாதிரி
8.(ஆ) 15
9.(அ) 15 மாதங்களுக்குமேல் செல்லக் கூடாது
10.(இ) நிதிப்பத்திரங்கள்
11.(ஆ) 1956
12.(அ) காளை
13.(ஈ) வரையறையில்லை
14.(இ) சரக்குகள்
15.(ஆ) மாவட்டத் தலைநகரங்களில்
16.(ஆ) இந்திய நிறுமச் சட்டம் 1956
17.(ஈ) வரையறுக்கப்படாத செயல் சுதந்திரம்
18.(அ) 51%
19.(அ) ஒப்பந்தத்தால்
20.(ஈ) நெகிழ்ச்சித் தன்மையற்றது

**கோடிட்ட இடத்தை நிரப்புக**

21. துறைப்படுத்துதல்
22. வாரிய அமைப்பு
23. தனியாள் வணிகம்
24. உழையா/ உறங்கும்/ முதலிடும் கூட்டாளி
25. 20
26. கூட்டாண்மைக் கலைப்பு
27. 7
28. செயல்முறை விதிகள்
29. செலுத்துவதாக ஒப்புறுதியளித்த முதல்தொகைக்கு மட்டும்
30. குறைவெண்
31. ஆண்டுப் பொதுக் கூட்டம்
32. 21
33. மும்பை
34. அவ்விடத்து ஒப்பந்தங்கள்
35. முனைம வேட்டையாளர்
36. 14%
37. மக்களாட்சித் தன்மை
38. துறைமுறை அமைப்பு
39. நாட்டுடைமையாக்கம்
40. பொதுத்துறை

**ஏதேனும் 10 வினாக்கள் 10X4=40**

**44.கர்த்தா** இந்துக்கூட்டுக்குடும்பத்தலைமைஉறுப்பினர் ஆவார்

**42. பன்னாட்டு நிறுமம்எ.கா:** 1.யூனி லீவர் லிமிடெட் 2.யூனியன் கார்பைடு 3.இன்டர்நேஷனல் பிசினஸ் மெஷின் 4.பிலிப்ஸ் 5.கோகோ கோலா கழகம்.

**43.வரையறா பொறுப்பு:**தொழிலின் கடன்களை செலுத்த தொழிலின் சொத்துக்கள் போதுமானதாக இல்லாவிடில் தனது சொந்த சொத்துக்களை இழக்க நேரிடும். அதாவது கடனீந்தோருக்கு உரிமையாளரின் சொந்த சொத்துக்களை பறிமுதல் செய்யும் உரிமை உண்டு

**44. கூட்டாண்மை** (ஏதேனும் ஒரு இலக்கணம்) 1932 ஆண்டு இந்திய கூட்டாண்மைச் சட்டத்தின் 4வது பிரிவின்படி “எல்லோரும் சேர்ந்தோ அல்லது எல்லோருக்குமாக ஒருவரோ நடத்தும் தொழிலின் இலாபத்தைப் பகிர்ந்துகொள்ள ஒப்புக் கொண்டவர்களிடையே நிலவும் உறவு”

**45. உழையாக் கூட்டாளி:**இவ்வகை கூட்டாளிகள் தொழிலில் முதலிடுவர். ஆனால் தொழில் நிர்வாகத்தில் பங்கு பெறுவதில்லை. இவ்வகை கூட்டாளிகள் உறங்கும் கூட்டாளிகள் அல்லது உழையாக் கூட்டாளிகள் அல்லது முதலிடும் கூட்டாளிகள் என அழைக்கப்படுவர்.

**46.பங்கு முனைமம்:** ஒரு நிறுமத்தின் பங்கொன்றின் வெளியீட்டு விலை முகமதிப்பை விட அதிகமாக இருக்கும். வெளியீட்டு விலைக்கும், குறைவாக உள்ள முகமதிப்பிற்கும் உள்ள வேறுபாடு முனைமம் என்று சொல்லப்படுகிறது. உ-ம் பங்கொன்றின் முகமதிப்புரூ10 எனவும் அதுரூ12க்கு வெளியிடப்படுவதாக கொண்டால் பங்குமுனைமம்ரூ2ஆகும்.

**47. அயல்நாட்டு நிறுமம்** இந்தியாவுக்கு அப்பால் (வெளிநாட்டில்) பதிவு செய்யப்பட்டு ஆனால் இந்தியாவில் தொழிலிடம் உள்ள நிறுமம்.

**48. மாற்று இயக்குநர் :** செயல்முறை விதிகள் அதிகாரம் வழங்கியிருக்குமாயின் இயக்குநர் ஒருவர் தொடர்ந்து மூன்று மாதங்கள் வெளி மாநிலத்திற்கு சென்றிருந்தால் அவருக்கு பதிலாக இயக்குநரவை மாற்று இயக்குநர் ஒருவரை நியமிக்கும் அந்த நபரே மாற்று இயக்குநர் ஆவார்.

**49. சட்டமுறை அறிக்கை:** சட்டமுறை கூட்ட நாளுக்கு 21 நாட்களுக்கு முன்னர் சட்டமுறை அறிக்கையை உறுப்பினர்களுக்கு அனுப்ப வேண்டும். சட்டமுறை அறிக்கையில் காணப்பெறும் செய்திகள் குறித்து பங்குநர்கள் விவாதிக்கலாம்.

**50. போல்ட்:** போல்ட்என்பது மும்பை பங்குச்சந்தையில் மாரச் 1995 முதல் நடைமுறையில்உள்ள வணிகச் செயல்பாடாகும்.

**51.பத்திரம்:** ஒருபத்திரம்என்பது ஒருவரின் உடைமை உரிமை (பங்கு)அல்லதுகடனீட்டுஉரிமையைக்குறிக்கும்ஒரு சான்றிதழ்.

**52.கூட்டுறவு:** H.C. கால்வேர்ட் - உறுப்பினர்களின் பொருளாதார நலனை பெருக்கிக் கொள்வதற்ககாக மனிதன் என்ற முறையில் சமத்துவ அடிப்படையில் மக்கள் அவர்களாகவே ஒன்றுபடும் அமைப்பே ஆகும்.

**53. கூட்டுறவு நாணயச் சங்கத்தின் நோக்கங்கள்:**
இது எளிய மக்களால் தன்னிசையாக இணைந்து உருவாக்கப்பட்ட அமைப்பாகும். இது உறுப்பினர்களுக்கு குறுகிய கால நிதியுதவி அளிக்கும் நோக்குடன் அமைக்கப்பட்டது இந்த வழிகளில் உறுப்பினர்களை கடும் வட்டிக்குப் பணம் தரும் கடனீந்தோரிடமிருந்து உறுப்பினர்களைக் காக்கிறது.

**54. அரசு நிறுமம் :** ஒரு நிறுமத்தின் செலுத்தப் பெற்ற பங்கு முதலில் 51%குறையாமல் மத்திய(அ) மாநிலஅரசு வைத்திருக்குமேயானல் அதனை அரசு நிறுமம் எனலாம்.

**55. பொதுக்கழகம் எ.கா:** இந்திய ரிசர்வ் வங்கி, இந்திய ஆயுள் காப்பீட்டு கழகம், யூனிட்டிரஸ்ட் ஆப் இந்தியா, அரசு வணிககழகம், இந்திய தொழில்நிதிக் கழகம்.

**ஏதேனும் 5 வினாக்களுக்கு விடையளி :5X8=40**

**56. பன்னாட்டு நிறுமம்:** பன்னாட்டு நிறுமம் என்பது இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட நாடுகளில் வியாபாரத்தை நடத்துவதாகும். நைல்H.ஜேகோபி – ஒரு பன்னாட்டு நிறுமம் என்பது ஒரு வியாபாரத்தை தொடங்கி இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட நாடுகளில் மேலாண்மை செய்து வருவதாகும். இதன் சிறப்பியல்புகள்: 1. ஒரே சமயத்தில் பல நாடுகளில் நடத்தப்படும். 2. மிகப் பெரிய அளவில் செயல்படும். 3. அயல்நாடுகளில்உள்ள கச்சாப்பொருட்கள், பணியாட்கள் சந்தையைப் பயன்படுத்திக்கொண்டு போக்குவரத்து செலவுகள் குறைத்தல்.
இன்று உலக அளவில் 500 முதல் 700 பன்னாட்டு நிறுமங்கள் செயல்படுகின்றன.அமெரிக்காவில் 60% சதவீத பன்னாட்டு நிறுமங்கள் ஆசிய நாடுகளில் 30% ஆப்பிரிக்காவில்10%நிறுமங்களும் செயல்படுகின்றன.

**பன்னாட்டுநிறுமஎ.கா.:** யூனிலிவர்லிமிடெட், யூனியன் கார்பைடு, இன்டர்நேசனல்பிசினஸ்மெசின், பிலிப்ஸ்,கோகோ கோலா.

**57.கூட்டாண்மை ஒப்பாவணத்தின் உள்ளடக்கம்**
1. நிறுவனத்தின் பெயர் 2. ஒப்பந்த நாள் மற்றும் தொழில் புரியும் இடம் 3. கூட்டாளிகளின் பெயர் மற்றும் முகவரி 4. நிறுவனம் மேற்கொள்ள இருக்கும் தொழிலின் தன்மை 5. கூட்டாண்மையின் காலவரையறை 6. ஒவ்வொரு கூட்டாளியும் வழங்கிய முதல் தொகை 7. ஒவ்வொரு கூட்டாளியும் நிறுவனத்திலிருந்து எடுக்கும் தொகை. 8. இலாப பகிர்வு விகிதம் 9. உழைக்கும் கூட்டாளிகளுக்கு கொடுக்கப்பட வேண்டிய ஊதியம் 10. முதல் மற்றும் எடுப்பு மீது வட்டி 11. கூட்டாளிகள் சேரும்போது விலகும்போது பின்பற்ற வேண்டிய நடைமுறை 12. நிறுவனக்கலைப்பின்போது கணக்குகளை தீர்த்துக் கொள்ளும் வழிமுறை 13. கணக்கு ஏடுகளை பராமரித்தல் மற்றும் தணிக்கை 14. கூட்டாளிகள் நிறுவனத்திற்கு தந்திடும் கடன் மற்றும் முன்பணம் மீதானவட்டி 15. நற்பெயரை மதிப்பிடும் முறை 16. கூட்டாளி தகராறுகளை தீர்க்க நடுவர் தீர்ப்பிற்கு விடும் முறை.

**58. அமைப்பு முறை ஏடு:** எந்த அடிப்படை நோக்கங்களுடன் நிறுமம் உருவாக்கப்பட்டுள்ளதோ அந்த அடிப்படை நிபந்தனைகளை உள்ளடக்கியது அமைப்பு முறை ஏடாகும்.
**அமைப்புமுறையேட்டின் உள்ளடக்கம் : அ)பெயர்குறித்த உட்பிரிவு** :நிறுமத்தின் பெயர் இதில் குறிப்பிடப்பட்டிருக்கும்.
**ஆ)நோக்கம் குறித்த உட்பிரிவு** :நிறுமம் ஈடுபடக்கூடிய நடவடிக்கைகள் அதில் குறிப்பிடப்பட்டிருப்பதால் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த உட்பிரிவாய் கருதப்படுகிறது.
**இ)இடங்குறித்த உட்பிரிவு** :பதிவு அலுவலகம் அமைந்துள்ள மாநிலத்தின் பெயர் இங்கு கொடுக்கப்பட்டிருக்கும்.

**ஈ)பொறுப்பு குறித்த உட்பிரிவு :** இப்பிரிவில் தான் உறுப்பினர்களின் பொறுப்பு வரையறுக்கப்பட்டிருப்பதாக கூறப்படுகிறது. பொறுப்புறுதி நிறுமமாயின் கலைப்பின் போது போதிய சொத்துக்கள் இல்லாதநிலையில் உறுப்பினர் கொண்டுவரும் தொகை குறிப்பிடப்படும்.
**உ)முதல் குறித்த உட்பிரிவு** :நிறுமத்தின் பங்குகளின் வகைகளும் அதன் முதலின் விவரங்களும் கொடுக்கப்படும்.

**59. பங்குகளை வட்டத்தில் வெளியிட நிபந்தனைகள்:**
1.வட்டத்திற்கு வெளியிடவுள்ள பங்குகள் முன்னரே வெளியிட்ட பங்கு வகையை சார்ந்ததாக இருக்க வேண்டும். 2.சாதாரண தீர்மானத்தின் மூலம் இதற்கு அதிகாரம் தந்திருக்க வேண்டும். 3. உயர்ந்தளவு தள்ளுபடி பங்கு ஒன்றின் முக மதிப்பில் 10 விழுக்காடுக்கு இது மிகக் கூடாது. 4. நிறுமம் தொழில் தொடங்கிய நாளிலிருந்து குறைந்தது ஓராண்டாவது சென்றிருக்க வேண்டும். 5. இதற்கு மைய அரசின் ஒப்புதல் பெற வேண்டும். 6. மைய அரசு அனுமதித்த 2 மாதங்களுக்குள் வெளியிட வேண்டும்.

**60. ஒரு பொது வரையறு நிறுமத்தில் இயக்குநர்கள் எவ்வாறு நியமிக்கப்படுகின்றனர்?** இயக்குநர்கள் வழக்கமாக நிறும செயல்முறை விதிகளில் பெயர் குறிப்பிட்டு நியமனம் பெறுவர். இல்லையெனில், அமைப்பு முறை ஏட்டில் கையொப்பமிட்டோர் முதலாம் இயக்குநர்களாகக் கருதப்படுவர்.
**அ. நிறுமம் நியமிக்கும் இயக்குநர்கள்:** ஒவ்வோராண்டும் ஆண்டுப் பொதுக் கூட்டத்தில் பங்குநர்களால் தேர்ந்தெடுக்கப்படுவதன் மூலம் இயக்குநர்கள் நியமனம் பெறுகின்றனர்.
**ஆ. இயக்குநரவை நியமிக்கும் இயக்குநர்கள்** கூடுதல் இயக்குநர்களை இயக்குநரவையே நியமிக்கலாம். தற்காலிகமாக எழும் காலி இடங்களை இயக்குநரவையே நியமித்து நிரப்பலாம். (இறப்பு, பதவி விலகல் போன்ற சூழ்நிலைகளில்) மாற்று இயக்குநர்களையும் இயக்குநர் அவை நியமிக்கலாம்.
**இ. மூன்றாம் தரப்பினர் நியமிக்கும் இயக்குநர்கள்:** செயல்முறை விதிகள் அதிகாரம் வழங்கினால் நிறுமத்திற்கு கடன் வழங்கியிருக்கும் வங்கி அல்லது நிதி நிறுவனங்கள் தங்கள் சார்பில் பிரதிநிதிகளை இயக்குநர்களாக நியமிக்கலாம்.
**ஈ. மைய அரசு நியமிக்கும் இயக்குநர்கள்:** நிறுமச் சட்ட அவை அளித்த ஆணையின் அடிப்படையில் மைய அரசு இயக்குநர்களை நியமிக்கலாம்.

**61. முதலீட்டார் ஊகவணிகர் வேறுபாடு :**

| முதலீட்டாளர்கள் | ஊகவணிகர்கள் |
|---|---|
| 1.முதலீடுகளின் பாதுகாப்பையே பெரிதும் விரும்புவார்கள் | முதலீகளின் மதிப்பை அதிகரிப்பதிலும் லாபம் பெறுவதிலும் குறியாக இருப்பர் |
| 2.முதலீடுகளின் மூலம் வருவாய் ஈட்டுவதையே விரும்புவர் | பத்திரங்களை வாங்கி விற்பதின் மூலம் கிடைக்கும் லாபத்தையே விரும்புவர் |
| 3.இடர்பாடு குறைவு | இடர்பாடு அதிகம் |
| 4.நிலையான வருவாய் | நிலையான ஆதாயம் |
| 5.நீண்ட காலம் ஈடுபாடும் பொறுப்புடையது | குறுகிய காலம் ஈடுபாடும் பொறுப்புடையது |

**62.கூட்டுறவுஅமைப்பின் குறைபாடுகள்:**
**1)திறமையற்ற மேலாண்மை:**கூட்டுறவுச் சங்கங்களிலுள்ள உறுப்பினர்கள் அமைப்பை மேலாண்மை செய்யப் போதுமான திறமையும் அனுபவமும் இல்லாதவர்களாக இருக்கிறார்கள். மேலாண்மையைத் திறம்படச் செய்ய ஆர்வமில்லாதவர்களாக இருக்கிறார்கள். திறமையுள்ள அனுபவமிக்க நபர்களை பணியில் அமர்த்த இயலாது.
**2)வரையறு முதல்**: குறைந்த வளங்கள் உள்ள மனிதர்களால் கூட்டுறவுச் சங்கங்கள வழக்கமாக அமைக்கப்படுகின்றன. ஒரு நபர் ஒரு வாக்கு முறை உறுப்பினர்கள் அதிக முதலீடு செய்வதை தடைசெய்கிறது. இதனால் இவ்வமைப்பு குறைந்த முதலுடன் சிரமப்படுகிறது.
**3)தக்க தூண்டுகோல் இல்லாமை:**இலாப நோக்குஇல்லாமையும் குறைந்த பட்ச 9விழுக்காடு பங்காதாயமும் மேலாண்மையின் பொறுப்புக்குறைய காரணமாகிறது. பணியாளர்கள் குறைந்த ஊதியம் பெறுவதால் கடின உழைப்பில் ஆர்வம் காட்டுவதில்லை.
**4)ஒற்றுமையின்மை:** சில வேலைகளில் உறுப்பினர்கள் அவர்களுக்குள் ஒற்றுமையாய் இருப்பதில்லை. இதனால் கூட்டுறவு அமைப்பின் வியாபாரம் பாதிக்கப்படுகிறது.

**63.அரசு நிறுமத்தின் இயல்புகள் :**
**1.கூட்டுருவாக்கம்:** அரசு நிறுமம் இந்திய நிறுமச்சட்டத்தின் கீழ் கூட்டுருவாக்கப்பட்டு தோற்றுவிக்கப்படுகிறது.
**2.அரசுநிதி** :இதற்கு தேவையான பெரும்பான்மை பங்குமுதல் அதாவது 51அரசு பெற்றுள்ளது.
**3.பொதுமக்கள் பங்கேற்பு:** தனியர் துறையும் பொதுமக்களும் பங்கு முதல் பெற்று இதில் பங்கேற்கிறார்கள். **4.மேலாண்மை:** இதன் மேலாண்மை இயக்குநரவையிடம் உள்ளது.தகுதி திறமை அனுபவம் வாய்ந்தவர்களையே இயக்குநர்களாக அரசு நியமிக்கும். இதில் பல பிரிவினர்களும் இடம் பெறும் வண்ணம் அரசு நியமிக்கின்றது. **5.தன்னாட்சியுரிமை :** அரசு நிறுமங்கள் நிர்வாகம் மற்றும் நிதி குறித்து சுதந்திரமாக முடிவெடுத்து செயல்படும் **6.பணியாளர்கள்:** அதன் பணியாளர்கள் அரசு அலுவலர் அல்ல. இயக்குநர்கள் மற்ற பணியாளர்களை அரசு தோர்ந்தெடுத்து அமர்த்தும்.**7.கட்டுப்பாடு** :அந்தந்த துறை சார்ந்த அமைச்சரின் கட்டுப்பாட்டிற்கும் கண்காணிப்பிற்கும் உட்பட்டு செயல்படுகிறது.
8.தணிக்கையர் :இதன் தணிக்கையாளரை அரசே நியமிக்கும்.

**அனைத்து கேள்விகளுக்கும் விடையளி: 4X20=80**

**64. அ)அமைப்பின் கோட்பாடுகளை விவரிக்க.**
**1.நோக்கங்களின்ஒருமை:** அமைப்பின் குறிக்கோள்கள் தெளிவாக முடிவு செய்யப்பட வேண்டும். நோக்கம் இலக்கினை அடையக்கூடியதாக இருக்க வேண்டும்.
**2.வேலைப்பகிர்வு:** அனைத்து நடவடிக்கைகளையும் திட்டமிட வேண்டும். இதன்மூலம் மொத்த பணிச்சுமை உணரப்படும். இது பகிர்வு செய்யப்பட வேண்டும். இதுவே துறைப்படுத்தல் ஆகும். **3. கட்டுப்பாட்டு வீச்செல்லை** : ஒரு அதிகாரி எத்தனை கீழ்ப்பணியாளர்களை சீரிய முறையில் நிர்வகிக்க முடியும் என்ற எல்லையே கட்டுப்பாட்டு வீச்செல்லை எனப்படும். ஓர் உயர் அலுவலர் தனக்கு கீழ் உத்தம எண்ணிக்கையில் கீழ்பணியாளர்களை மேற்பார்வை செய்வதே அமைப்பின் திறனை மேம்படுத்தும். **4. தரவரிசைக் கோட்பாடு** : ஆணையுரிமையின் வரிசை உயர்மட்டத்திலுள்ள உயர் அலுவலரிடமிருந்து கீழ் மட்டத்திலுள்ள தொழிலாளர்கள் வரை படிப்படியாக கீழ் நோக்கி வர வேண்டும். இது "கட்டளை இணைப்பு" என்றும் அழைக்கப்படும். **5. கட்டளையொருமை** : ஒரு பணியாளர் ஒரு அதிகாரியிடமிருந்தே ஆணைகளை பெறும் வகையில் அமைப்பு இருக்க வேண்டும். இரண்டு அதிகாரிகளின் கீழ் ஒருவர் பணியாற்றும் நிலை எழுந்தால் யாருடைய ஆணையை நிறைவேற்றுவது என குழப்பம் ஏற்படும், இதன் விளைவாக குழப்பமும், ஒழுங்கின்மையும் ஏற்பட வாய்ப்பு அதிகம். **6. பணி வழி வரைவிலக்கணம்** : ஒரு பணியாளரின் ஆணையுரிமையும் பொறுப்பும் தெளிவாக வரையறுக்கப்படுதல் அவசியம். ஒவ்வொரு பணியாளருக்கும் இடையே உள்ள தொடர்புகள் தெளிவாக குறிப்பிடப்பட வேண்டும். **7. ஒருமுனை இயக்கம்** : ஒவ்வொரு குழு நடவடிக்கைகளின், தொகுதியின் நோக்கங்கள் வெற்றியடைய ஒரு தலைமையும் ஒரு திட்டமிடுதலும் இருக்க வேண்டும். அமைப்பின் நடவடிக்கைகளை ஒருங்கிணைக்கவும், பணிகளை நிறைவேற்றவும் இது அவசியம். **8. ஒருங்கிணைத்தல்** : விரும்பும் இலக்கினை அடைய நிறுவனத்தின் பல்வேறு நடவடிக்கைகளும் ஒருங்கிணைக்கப்பட வேண்டும். ஒவ்வொரு துறையும் மற்ற துறைகளுடன் அடிக்கடி கலந்து ஆராய்ந்து முடிவு எடுக்க வேண்டும். இலாபம் அதிகரிக்க கொள்முதல் துறையும், விற்பனைத் துறையும் ஒருங்கிணைந்து செயல்பட வேண்டும்.
**9. அதிகார ஒப்படைவு** : ஓர் உயர் அதிகாரி தனக்கு கீழ் உள்ள பணியாளரிடம் சில பணிகளை ஒப்படைக்கிறார். இதை நிறைவேற்ற தேவையான அதிகாரங்களையும், உரிமைகளையும் வழங்க வேண்டும். கீழ் பணியாளர் தனது மேலதிகாரிக்கு பொறுப்பாகிறார்.**10. பொறுப்பு கோட்பாடு** : ஒரு மேலதிகாரி தனக்குக் கீழ்பணியாற்றும் பணியாளர்களின் செயல்களுக்கு பொறுப்பாகிறார்.
அலுவலர் தனது மேலதிகாரிக்குப் பொறுப்பாகிறார். **11. நெகிழ்வுத்தன்மை** : மாறும் சூழ்நிலைக்கேற்ப அமைப்பும் மாறக்கூடிய வகையில் இருக்க வேண்டும். சீர்குலைவு ஏதுமின்றி விரிவுபடுத்தக்கூடிய வகையில் அமைப்பு இருத்தல் வேண்டும். இதுவே நெகிழ்வுத்தன்மையாகும். **12. திறமை** : அமைப்பின் வெற்றிக்கு திறமையே திறவுகோல். திறமை

பயிற்சி மூலம்மேம்படுத்தப்படலாம். குறிக்கோள்களை குறைந்த செலவில் அதிக பலனுடன் நிறைவேற்ற திறமை பயன்படும். **13.தனித்திறமை :** அமைப்பு தனிநபர் திறமை தொடர்பானது. எனவே, பணியாளர் தேர்வு, இட அமர்வு, பயிற்சி அவசியமாகிறது. அமைப்பு மனிதவளத்தை உத்தம அளவில் பயன்படுத்தி வளர்ச்சித்திட்டங்களை ஊக்கமடையச் செய்ய வேண்டும். **14. எளிமை :** அதிகார படிநிலை மட்டங்கள் அதிகமாக இருந்தால் செய்தித் தொடர்புகளில் சிக்கலும், குழப்பமும், மோதலும் ஏற்படும். ஒருங்கிணைப்பு முடியாது போகலாம். எனவே, எளிமையான படிநிலைகள் அமைக்கப்பட வேண்டும்.

**64.ஆ. பங்குமாற்றத்தின் நன்மைகள்** :

**நிறுமத்திற்கு நன்மைகள்:** 1. பங்கு மாற்றகம் கையாளும் பங்குகளுக்குரிய நிறுமங்களின் மதிப்பு உயரும். நிறுமம் வலுவானது என்ற எண்ணம் உருவாகும். 2. நிறுமங்களின் பங்குகளுக்கு பரந்த சந்தை கிடைக்கிறது. 3. நிறுமம் வேறொரு நிறுமத்தோடு இணைக்கப்படும்போது சாதகமான பேரத்தை பெற உதவி செய்கிறது. 4. ஊக வணிகர்களின் செயல்பாட்டினால் பட்டியலிடப்பட்ட பத்திரங்களின் விலைகளில் அடிக்கடி ஏற்படும் ஏற்ற தாழ்வுகள் குறைகின்றன.

**முதலீட்டாளருக்கு நன்மைகள்:**

1. முதலீட்டாளர்கள் தம் விருப்பம்போல் பத்திரங்களை வாங்க விற்க ஆயத்த சந்தையாக விளங்குகின்றன.
2. பத்திரங்களுக்கான நிலையான சந்தையையும் முதலீடுகளுக்கான நீர்மைத் தன்மையையும் அளிக்கின்றது.
3. பங்கு மாற்றகங்களில் வாணிகம் செய்யப்படும் பத்திரம் கடன்பெற நல்ல பிணையமாக ஏற்கப்படுகின்றன. 4. பத்திர மதிப்பு விலைப்புள்ளியாக வெளியிடப்படுவதால் முதலீட்டின் நடப்பு உண்மை மதிப்பை அறிந்து கொள்ள முடிகிறது.

**சமுதாயத்திற்கு ஆற்றும் சேவைகள்:**

1. பெருமளவு மூலதன உருவாக்கம் செய்து நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு உதவுகிறது. 2. பத்திர விற்பனையை ஊக்கப்படுத்தி சிறப்பாக மேலாண்மை செய்யப்படும்நிறுமங்களின் நிலையை உயர்த்துகின்றன.
3. அரசு நிதியை மக்களிடம் கடனாக பெற, நாட்டின் முக்கிய வளர்ச்சி திட்டங்களை அரசு நிறைவேற்றுவதற்கும் உதவுகின்றன. 4. நாட்டின் தொழில் நிலையை அளவிடும் கருவியாக பங்கு மாற்றகங்கள் செயல்படுகின்றன;.

**பங்கு மாற்றகங்களின் குறைபாடுகள்:**

1. அமைப்பு முறை சீராக கட்டுப்பாடோடு இல்லை.
2. உறுப்பினருக்கு குறைந்தபட்ச கல்வித்தகுதி நிர்ணயிக்கப்படவில்லை. உறுப்பினராக கட்டுப்பாடுகள் ஏதுமில்லை.
3. விரும்பத்தகாத ஆரோக்கியமற்ற ஊக வாணிகத்தை கட்டுப்படுத்த தவறியிருக்கிறது.
4. பட்டியலிடப்படுவதற்குச் சரியான விதிமுறைகள் பின்பற்றப்படுவதில்லை.
5. சில நகரங்களில் ஒன்றுக்கு மேற்பட்ட பங்குமாற்றகங்கள் செயல்படுகின்றன.

**65)அ) தனிநபர் வணிகத்தின் குணாதிசியங்கள்:**

**1)தனிநபர்உரிமையும்கட்டுபாடும்:** தனிநபர் ஒருவரே இதன்உரிமையாளர். எனவே அவரே உரிமையாளராகவும் தலைவராகவும்யாருடையகுறுக்குஇல்லாமல்சுந்திரமாக வியாபாரத்தைநடத்துகிறார்.அதனால்தனியாள்வணிகத்தின் உரிமையும் கட்டுப்பாடும்அவர் வசமேஉள்ளது.

**2)மூலதனம்:** தனியாள்வணிகத்தில் அவரே முதலீடு செய்கிறர். இம் முதல் தன் சொந்த சேமிப்பிலிருந்தோ அல்லது நண்பர்கள் உறவினர்கள் மற்றும் நிதி நிறுவனங்களிடமிருந்தோ கடனா பெற்று முதலீடு செய்யலாம்.

**3)வரையறாபொறுப்பு:**இவரின்பொறுப்பு வரையறுக்கப்படாதது. வியாபாரகடன்களுக்குதொழிலின்சொத்துகள்போதுமானதாக இல்லாவிட்டால்தனதுசொந்தசொத்திலிருந்துஅக்கடன்களை தீர்க்கவேண்டும்.

**4)இலாபநட்டம்:**வியாபாரத்தில்கிடைக்கும்இலாபம் முழுவதும்தனிவணிகரையேசேரும். அவர்பிறருடன் பங்கிட்டுக்கொள்ளதேவையில்லை.அதுபோலநட்டம்ஏற்பட்டால் அந்தநட்டம்முழுவதையும்அவரேஏற்கவேண்டும்.

**5)சட்டத்தனித்துவமின்மை:** தனியாள்வணிகத்தில் உரிமையாளரையும்தொழிலையும்சட்டம்ஒன்றாகக்கருதுகிறது. உரிமையாளரோஅவரேநிர்வாகம்செய்கிறார்.கூட்டுப்பங்குநிறுமத் தைப்போல்உரிமையும்நிர்வாகமும்பிரிக்கப்படவில்லை.

**6.தனிச்சட்டம்மில்லை:**கூட்டாண்மைசட்டம்கூட்டாண்மைக்கும்இந் தியநிறுமங்கள்சட்டம்நிறுமத்திற்கும்இந்தியகூட்டுறவுச்சட்டம் கூட்டுறவுசங்கங்களுக்கும்இருப்பதைப்போலதனியாள் வணிகத்திற்குதனிச்சட்டம்ஏதுவும்இல்லை.

**7)பதிவு:-** தனியாள்வணிகத்தைபதிவுசெய்ய வேண்டியதில்லைசிலவகைத்தொழில்களைமேற்கொள்ள உள்ளாட்சிநகராட்சிமற்றும்மாநகராட்சியிடமிருந்து உரிமம்பெறவேண்டும்.

**8)வாழ்வு:** நிறுமம்போன்றுஇதற்குநீடித்தவாழ்வு கிடையாது. தனியாள்வணிகரின்வாழ்வைப்பாதிக்கும் எதுவும்அவருடையதொழிலையும்பாதிக்கும்.அவருடையஇறப்பு( அ)தொழில்திறமைஇழத்தல்(அ) அவருக்கு வாரிசுஇல்லாமை போன்றவை தொழிலை முடிவுக்குகொண்டுவரும்.

**9)எளிமை**இதைதொடங்குவதும்கலைத்தலும்மிகவும் எளிது. இவ்வணிகத்தைகலைக்கசட்டவிதிகளைபினபற்ற தேவையில்லை.

**10உள்ளுர்வியாபாரம்:**இவ்வணிகம்ஒருகுறிப்பிட்டப்பகுதியில்மட் டுமேநடைபெறும். சிலவகைத் தனிவணிகங்கள் கிளைகளுடன்சிலஇடங்களில்நடைபெறும்.

**65.ஆ)நிறுமச்செயலரின் பணிகளும் கடமைகளும் :**

1.நிறுமத்தின் செயலகத்துறையின் தலைவர் என்ற முறையில் தனக்குகீழ்லுள்ள அனைத்து நடவடிக்கைகளை மேற்பார்வை செய்து கட்டுப்பாட்டில் வைத்திருத்தல் நிறுமத்தின் முன்மை அதிகாரி என்ற முறை உண்மைச்சான்றென உறுதியளிக்க வேண்டிய ஆவணங்களில் கையெழுத்திடுதல் அவருடையபணி.

2.இயக்குநரவை தலைவரிடம் கலந்தாலோசித்து இயக்குநரவை கூட்டநாள் இடம் நேரம் முதலியவற்றை முடிவ செய்தலும் அதன் நிகழ்ச்சி நிரலைத்தயாரித்து அதனை கூட்டஅறிவிக்கையுடன் இணைத்தணுப்புதலுமாரும்.

3.இயக்குநரவை கூட்டத்தின் செயல்பாடுகள் நிறுமங்கள் சட்ட விதிமுறைகளுக்கு முரண்படாமலும் அமைப்பு முறையேடு செயல் முறை விதிகள் ஆகியவற்றின் வரம்பு மிகாமலிருக்க பார்த்துகொள்ள வேண்டியது அவர் பணிகள் ஆகும்.

4.பங்குநர்களின் நலன் சிறக்கும் வகையில் செயலர் பணிசெய்கிறார்.அவர்களுடன் கூர்மதிப்புடன் நடந்தகொள்ள வேண்டும்.

5.பங்குநர்கள் எழுப்பும் வினாக்களுக்கும் ஐயங்கட்கும் உாயி முறையில் பண்புகாத்து காலங்கடத்தாமல் பதிலளிக்க வேண்டும்.

சட்ட முறைக்கடைமைகள் :

1.எச் சட்டத்தின் கீழாவது உண்மையென சான்றளிக்க வேண்டியிருப்பின் அத்தகைய ஆவணத்தில் கையொப்பமிடல்
2.தகவலறிக்கைக்கு மாற்றறிக்கை தக்கல் செய்ய
3.நிறுமத்தின் பதிவலுவலகம் உள்ள இடம்குறித்த அறிக்கையைத்தாக்கல் செய்ய
4.தொழில் தொடக்கச் சான்றிதல் பெற சட்டமுறை உறுதிவிலம்பல் செய்தலும் அவற்றை பதிவாளரிடம் தக்கல் செய்தலும்.
5.நிறுமத்தின் ஆண்டறிக்கையில் கையப்பமிடல்

பொதுக் கடமைகள் :

1.தன்னுடைய கமைகளை மிகுந்த கவனத்துடனும் நேர்மையுடனும் தன் அதிகார எல்லையை மீறாது செயல்படலும்.
2.இரகசியமான செய்திகளை வெளியிடாது காத்தல்.

**66)அ)கூட்டாண்மைநிறுவனம் கலைக்கப்படும் சூழ்நிலைகள் :**

**1.கூட்டாளிகளின் உடன்பாட்டால் (பிரிவு 40):** ஒரு கூட்டாண்மை நிறுவனம் உடன்பாட்டால் உருவாக்கபடுகிறது கலைக்கப்படுகிறது.அனைத்து கூட்டாளியின் சம்மதத்தின் பெயரில் அல்லது கூட்டாளிகளுக்கிடையே ஏற்படும் உடன்பாட்டால் கூட்டாண்மை நிறுவனம்ட கலைக்கபடலாம்.

**2.கட்டாய கலைப்பு (பிரிவு 41)** அனைத்து கூட்டாளிகளின் நொடிப்பு நிலையோ அல்லது ஒருவர் தவிர மற்ற எல்லா கூட்டாளிகள் நொடிப்பு நிலையோ கூட்டாண்மை நிறுவனம் கட்டாயமாக கலைக்கபடும்.மேலும் செய்து வரும் தொழில் சட்டத்திற்கு புறம்பானதாக இருந்தால் நிறுவனம் கட்டாயமாக கலைக்கபடும்.

**3.சில நிகழ்சிகள் நிகழ்வுறும் போது கலைப்பு (பிரிவு 42):** கூட்டாளியின் இறப்பு கூட்டாளியின் நொடிப்பு குறைந்த காலத்திற்கான கூட்டாண்மை – அந்தக் காலம் முடிந்தவுடனும் குறிப்பிட்ட தொழில் - அந்த தொழில் முடிந்தவுடன்.

**4.அறிவிக்கையால் விருப்பமுறிக் கூட்டாண்மை பிரிவு – 43 :**விருப்பமுறிக் கூட்டாண்மையில் ஒரு கூட்டாளி நிறுவனத்தை

கலைக்கும் தனது விருப்பத்தை அறிவிக்கை மூலம் கொடுத்தால்' நிறுவனம் கலைவுறும்.

**5.நீதி மன்றத்தால் பிரிவு - 44:**கூட்டாளி எவரேனும் ஒருவர் கீழ்காணும் காரணங்களுக்காக வழக்கு தொடர்வதன் மூலம் நிறுவனத்தை கலைக்க நிதிமன்றம் ஆணையை பிறப்பிக்கலாம்.

**(1)கூட்டாளி ஒருவரின் பித்த நிலை** :கூட்டாளி ஒருவரின் பித்த நிலையை அடைந்தால் நீதி மன்றம் கலைப்பதற்கான ஆணையை பிறப்பிக்கலாம்.

**(2)நிலையான திறமை இன்மை** :கூட்டாளி ஒருவர் நிரந்தரமாக தொழில் செய்யும் திறமையை இழந்திருந்தால்

**(3)கூட்டாளியின் தீய நடத்தை** :கூட்டாளி ஒருவர் ஒழுக்கக் கேடான குற்றத்தை செய்திருப்பின்

**(4)உரிமை மாற்றம்** :கூட்டாளி ஒருவர் தனது உரிமை நலனை பிறருக்கு மாற்றி கொடுத்தால்

**(5)தொடர்ந்து உடன்பாட்டை மீறுகை** :கூட்டாண்மை உடன்பாட்டை ஒரு கூட்டாளி தொடர்ந்து மீறிக்கொண்டிருந்தால்

**(6)தொடர் நட்டம்** :கூட்டாண்மை நிறுவனத்தில் தொடர்ந்து நட்டம் ஏற்பட்டால் கலைக்க நேரிடும்.

**66.ஆ) துறைவாரி அமைப்பின் இயல்புகள், நிறை குறைகளை விளக்குக** துறைவாரி அமைப்பு அரசுத் தொழில்களின் வடிவமைப்புகளில் மிகவும் தொன்மையானதாகும். இந்தியாவில் இரயில், அஞ்சல் தந்தி, வானொலி போன்றவை துறைவாரி அமைப்பில் உருவாக்கப்பட்டவை.

துறைவாரி அமைப்பின் இயல்புகள்:

1. தேவைப்படும் நிதிமுழுவதையும் அரசே அளிக்கிறது.
2. இது அரசுக்கு முற்றும் கட்டுப்பட்டு இயங்குகின்றது. இத்துறைக்கென அமைச்சர் உண்டு. இந்நிறுவன வளர்ச்சி, இயக்கம், குறைபாடுகள் பற்றி பாராளுமன்றத்திற்கும், சட்டப் பேரவைகளுக்கும் பதில் சொல்லும் கடமை அந்த அமைச்சகத்திற்கு உண்டு.
3. இதில் செங்குத்து அதிகார உறவு காணப்படுகிறது.
4. இதற்கு தேவைப்படும் நிதி பாராளுமன்ற அல்லது சட்டமன்ற நிதி அறிக்கையின்மூலம் ஒதுக்கப்படுகிறது.
5. இதன் வரவு – செலவுத் திட்டம், அரசின் கணக்குப்பதிவு முறை மற்றும் தணிக்கைக்கு உட்பட்டதாகும்.
6. இது அரசின் பகுதி. எனவே அரசுக்குரிய சட்ட விலக்களிப்பு பெறுகிறது. அரசின் இசைவின்றி இந்நிறுவனங்களுக்கெதிராக வழக்கு தொடுக்க இயலாது.

**துறைவாரி அமைப்பின் நிறைகள்:**

1. முழுமையான அரசு கட்டுப்பாடு: அரசின் நேரடி கட்டுப்பாட்டில் இயங்குபவை, எனவே, செயல்பாடுகளை சரியான வழியில் கட்டுப்படுத்த முடியும்.
2. மேலாண்மை: அரசு அலுவலர்கள் மேலாண்மை செய்வதால் உண்மையாகவும் திறம்படவும் உழைப்பர்.
3. அரசுக்கு வருவாய் ஈட்டுகிறது: வியாபார நோக்கில் செயல்பட்டு அரசுக்கு வருவாய் பெருக்கி, அது சமூக வளர்ச்சிப் பணிகளுக்காக செலவிடப்படும்.
4. அரசின் கொள்கைகள்: அரசின் கொள்கைகளையும், திட்டங்களையும் அரசின் நேரடிக் கட்டுப்பாட்டில் இந்நிறுவனங்கள் செயல்படுத்துகின்றன.
5. இரகசியம் காத்தல்: அணுசக்தி, பாதுகாப்புத் தொழில்களின் கொள்கைகள் மற்றும் செயல்பாட்டினை பற்றிய இரகசியங்களை பாதுகாத்து வைக்க இதுவே தகுந்த அமைப்பு.
6. குறிப்பிட்ட தொழில்களுக்கு ஏற்ற அமைப்பு: பொதுச் சேவை சார்ந்த, நீண்ட தொடக்க காலம் கொண்ட தொழில்களுக்கு ஏற்ற அமைப்பு.
7. பதில் சொல்லும் கடமை: செயல்பாடுகளை பற்றி பாராளுமன்றத்திலோ, சட்டப் பேரவையிலோ அது தொடர்புள்ள அமைச்சரகம் பதில் கூற வேண்டும். எனவே, மக்கள் நலன் காக்கப்படும்.

**துறைவாரி அமைப்பின் குறைபாடுகள்:**

1. அரசு தலையீடு: கொள்கைகளை அரசு தலையீடின்றி சுதந்திரமாக அமைக்க முடிவதில்லை. மேலும், அரசு தலையீடு, முடிவுகள் எடுப்பதில் கால தாமதத்தை ஏற்படுத்துகிறது.
2. தகுதிவாய்ந்த அலுவலர் இன்மை: வணிக கண்ணோட்டம் அற்ற, தொழில் நுட்பமறியா அரசு அலுவலர்களே பொறுப்பிற்கு வருகின்றனர்.
3. மைய அதிகாரம்: தொழில்துறை காரணங்கள் புறக்கணிக்கப்பட்டு நெகிழ்வற்ற, மரபுமாறா நடைமுறை பின்பற்றப்படுகிறது.
4. தாமதம்: அரசியல் தலையீடு, மைய அதிகாரம் இவைகளால் இத்துறை செயல்பாடுகளில் தாமதம் ஏற்படுகிறது.
5. வரிச்சுமை: இத் தொழில் நிறுவனங்களில் ஏற்படும் நட்டம் காரணமாக அதை ஈடுசெய்ய அரசு பொதுமக்களுக்கு மேன்மேலும் வரிவிதிக்கலாம்.

**67.அ) தனி வரையறு நிறுமம் பொது வரையறு நிறுமம் வேறுபாடு :**

| வ.எண் | அடிப்படை | தனி நிறுமம் | பொது நிறுமம் |
|---|---|---|---|
| 1 | உறுப்பினர் எண்ணிக்கை | குறைந்தது 2 அதிகபட்சம் 50 | குறைந்தது 7 உச்ச அளவிற்கு வரையறை இல்லை |
| 2. | பெயர் | இறுதியில் தனிவரையறுக்கப்பட்டது.என்று முடிவடைய வேண்டும். | வரையறுக்கப்பட்டது என்ற சொல்லுடன் முடிவடைய வேண்டும். |
| 3. | செயல்முறை விதிகள் | தான் சொந்தமாக தயாரித்த செயல் நடைமுறை விதிகளை நிறுமப்பதிவாளரிடம் சமர்பிக்க வேண்டும். | செயல் நடைமுறை விதிகளை தாயாரிக்காத நிறுமங்கள் நிறுமச்சட்டத்தில் உள்ள மாதிரி அட்டவணை –அ பின்பற்ற வேண்டும். |
| 4. | குறுமப்பங்கொப்பம் | அவசியமில்லை | கட்டாயமாக்கப்பட்டுள்து |
| 5 | இயக்குநர்கள் | குறைந்தது 2 இயக்குநர்கள் தேவை | குறைந்தது 3 இயக்குநர்கள் தேவை |
| 6. | சட்ட முறை கூட்டம் | அவசியமில்லை | 6மாதத்திற்குள் கூட்ட வேண்டும். |
| 7. | தகுதிப்பங்குகள் | இயக்குநர்கள் தேர்ந்தெடுக்கப்பட தகுதிப்பங்குகள் பெறவேண்டிய அவசியமில்லை | இயக்குநர்கள் தகுதிப்பங்குகளை பெற்றிட வேண்டும். |
| 8. | குறைவெண் | கூட்டம் செல்லத்தக்கதாக அமைய கூட்டத்திற்கு வருகை தர வேண்டி குறைந்தளவு உறுப்பினர்களின் எண்ணிக்கை 2 | குறைந்தளவு உறுப்பினர்களின் எண்ணிக்கை 5 |
| 9. | பங்கு விற்பனை | பொது மக்களுக்கு பங்கு விற்பனை தடை செய்யப்பட்டுள்ளது | பங்கு விற்பனை செய்யலாம் |
| 10. | இயக்குநர்களின் ஓய்வு | 65 வயதுக்கு மேலும் இயக்குநராக பணியாற்றலாம் | 65 வயதில் ஓய்வு பெற வேண்டும். |

**67.ஆ) கூட்டுறவு அமைப்பின் ஏதேனும் 10 சிறப்பியல்புகள் :**

**1.தன்னிச்சையாக சேரும் சங்கம்:** பலர் தன்னிச்சையாக சேர்ந்து உருவாக்கும் அமைப்பே கூட்டுறவுச் சங்கமாகும்.இவ்வமைப்பில் உறுப்பினராக சேருமாறு ஒருவரை கட்டாயபடுத்த முடியாது.ஒரு நபர் எப்போது வேண்டுமானாலும் இச் சங்கத்தில் சேரலாம் விலகலாம்.

**2.சமத்துவம்** : கூட்டுறவு சங்கத்தில் எல்லா உறுப்பினர்களும் சமம்.எல்லா உறுப்பினர்களுக்கம் சமஉரிமை உண்டு.அதிகமான முதலீடு ஒருவர் அளிக்கும் காரணத்தால் அதிக உரிமை அவருக்கு கிடையாது.

**3.வளங்களின் இணைப்பு:** இந்த அமைப்பில் எல்லா உறுப்பினர்களின் சொந்த வளங்களும் ஒருங்கிணைக்கப்படுகிறது.அவர்களட எல்லா உறுப்பிநர்களின் நரனுக்காக இதை பயன்னடுத்தகின்றனர்.
**4.ஒருமுனைபடுத்திய முயற்சி:** இந்த அமைப்பில் எல்லாத் தனிநபர்களும் இணைந்து பணியாற்றுகின்றனர்.கூட்டுறவு அமைப்பின் முக்கிய கோட்பாடு ஒவ்வொருவரும் அனைவருக்காக அனைவரும் ஒவ்வொருவருக்காக
**5.பன்மர் உறுப்பினராதல் :** பன்மர் இணைந்து உருவாக்கும் சங்கம் கூட்டுறவு அமைப்பு.ஒரு அமைப்பை உருவாக்க குறைந்தது 25 நபர்கள் தேவை.அதிக பட்சம் வரையறை இல்லை
**6.நிதி :** கூட்டுறவு சங்கத்தின் முதல் சம மதிப்புடைய பங்குகளாக பிரிக்கப்பட்டுள்ளது.இந்தச் சங்கமும் தனது பங்கு முதலை உறுப்பினர்களிடம் திரட்டுகிறது.பங்குகளின் முகமதிப்பு மிகக் குறைவானதாக இருக்கும்.ஒரு நபர் இச் சங்கத்தின் பங்குகளை வாங்குவதன் மூலம் உறுப்பினராகலாம்.
**7.அரசியல் செல்வாக்கு இல்லை:** கூட்டுறவு சங்கத்தில் அரசியல்வாதி உறுப்பினராகலாம்.ஆனால் அரசியல் அங்கு நுலைவதில்லை.அரசியல் சார்பற்ற அமைப்பாக இச்சங்கம் இயங்குகிறது.
**8.பரஸ்பர உதவி:** சங்கத்தில் உள்ள ஒவ்வொரு உறுப்பினரும் பரஸ்பர உதவி செய்ய வேண்டும் என்பது கூட்டுறவு அமைப்பின் அடிப்படை தத்துவம்
ஒவ்வொரு உறுப்பினரும் தனக்கும் உதவி செய்து கொண்டு பிறருக்கும் உதவ வேண்டும்.
**9.சட்டமுறை தணிக்கை:** கூட்டுறவு தணிக்கை துறையைச் சார்ந்த அலுவலர்கள் ஒவ்வொரு ஆண்டும். கூட்டுறவு சங்கத்தை தணிக்கை செய்கின்றனர்.
**10.ஊக வணிகம் இல்லை:** கூட்டுறவு அமைப்பின் பங்குப் பட்டியல் பதிய உறுப்பினர்களுக்காக எப்போதும் திறந்தே இருக்கும்.ஊக வணிகம் என்பது இவ்வமைப்பில் இல்லை.
11.மக்களாட்சி முறையில் மேலாண்மை
12.சேவையின் தத்துவம்
13.சட்டத் தகைமை
14.உறுப்பினராவதற்க்கு தடையில்லா வாய்ப்பு
15.முதலுக்கு சொற்ப வருவாய்
16.உள்ளூர் உறுப்பினர்கள்
17.மாநிலஅரசு கட்டுப்பாடு
18.உபரிபகிர்வு
19.பதிவு
20.சட்ட உரு
21.பொறுப்பு
22.ரொக்க வியாபாரம்
23.பங்குகளை மாற்ற இயலாமை
24.சட்ட ஆளுமை
25.முறையான பயிற்சி